செய்தி வெளியீடு எண். 317 நாள். 18.6.2009

## இந்து சமய அறநிலையத்துறை – சென்னை.

## செய்திக் குறிப்பு

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகள் நலன்கருதி **"கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்"** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், 9 அலுவல்சார் மற்றும் 10 அலுவல்சாரா உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத் திருக்கோயில்களில் பூஜை செய்யும் 35863 பூசாரிகள் இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவர்களுக்கு கடந்த 25.2.2009 அன்று அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்த நல வாரியம்மூலம் கிராமக்கோயில் பூசாரிகளுக்கு மூக்குக்கண்ணாடி வாங்குவதற்கு ரூ.500/–, அவரது குழந்தைகளின் உயர் கல்விக்கு ரூ.1000 முதல் ரூ.6000 வரை உதவி, திருமணத்திற்கு நிதி உதவி ரூ.6000/–, மகப்பேறு–கருச்சிதைவு–கருக்கலைப்பிற்கு நிதி உதவியாக மாதம் ஒன்றுக்கு ரூ.1000/–வீதம் 6 மாதங்களுக்கு மொத்தம் ரூ.6000/–, மற்றும் உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இறுதி சடங்கிற்கு ரூ.2000/–மும், வாரிசுதாரருக்கு நிதி உதவி ரூ.15,000/– வழங்கிட திட்டங்களும் மற்றும் உறுப்பினருக்கு விபத்து ஏற்படின், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ரூ.25,000/– முதல் ரூ.1,00,000/–வரை வழங்கும் நிதி உதவி போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

சென்னை, அடையாறு அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அனந்த மண்டபத்தில், 19.6.2009 அன்று (வெள்ளிக்கிழமை) மாலை நடைபெறும் விழாவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் முதற்கட்டமாக 126 பூசாரிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கிட நிதி உதவியும், 24 பூசாரிகளின் மகன்/மகளின் திருமணத்திற்கு நிதி உதவியும், 52 பூசாரிகளின் குழந்தைகளின் உயர்கல்விக்கு நிதி உதவியும், இறந்துபோன பூசாரி ஒருவரின் வாரிசுக்கு நிதி உதவி உட்பட, நலத் திட்ட உதவிகள் தேவைப்படும் 202 பூசாரிகளுக்கு மொத்தம் ரூ. 2.93 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர், திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகிக்கிறார். இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர், திரு ப.ரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்க உள்ளார். விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள், பூசாரிகள் நல வாரிய அலுவல் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.